Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 194/2020

| | |
|---|---|
| | Prosecution PW 2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஆனந்தகுமார் |
| Father's Name | : | முருகேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1972 of the day of 01.08.2022

முதல் விசாரணை

நான் கரூர் மாவட்டம் புகலூர் தாலுகா குப்பம் நடுப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கரூர் ஈஸ்வரன் கோவிலில் அருகில் வேன் ஸ்டான்டில் செந்துார் முருகன் டிராவல்ஸ் பெரியல் வேன் வைத்து ஓட்டி வருகிறேன். என் மனைவி பெயர் சாமியாத்தாள். அவர் பி.ஏ,பிஎட் படித்துள்ளார்.அவர் ஆசிரியர் வேலைக்கு முயற்சி செய்துகொண்டிருந்தார். எதிரி பாலமுரளி சுபம் டிராவல்ஸ் ல் டிரைவராக வேலை செய்து

S/d.K.Ambiga

அசா 2 ஆனந்தகுமார் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கொண்டிருந்தார். அதனால் அவர் எனக்கு பழக்கம்.அவர் என்னிடம் என் மனைவிக்கு அரசு வேலை வாங்கி தருவதாக சொல்லி அதற்கு 3 லட்சம் செலவாகும் என்று என்னிடம் சொன்னார். மேலும், 1 மாதத்திற்குள் ரெடி பண்ணி கொடுக்க சொன்னார். அதன் பேரில் 10.01.2018 ம் தேதி கரூர் ஈஸ்வரன் கோவில்வடபுறம் கஸ்தூாரிபாய் மருத்துவமனை முன்பு 3 லட்சத்தை ரொக்கமாக கொடுததேன். அப்போது என் தம்பி பழனிவேல் உடன் இருந்தார். 8 மாதத்தில் வேலை வாங்கி தரவில்லை பணத்தை திருப்பி கொடுப்பதாகவும், டைப்செய்து எழுதி அதில் கையொப்பம் இட்டு சாட்சியாக என் தம்பி கொடுத்துள்ளார். பிறகு 1 வருடம் ஆகியும் எங்களுக்குவேலை வாங்கி கொடுக்கவில்லை நான் கொடுத்த பணத்தையும் கொடுக்கவில்லை. விசாரித்தபோது செல்வவிநாயகா டிராவல்ஸ் நடத்தியவரும் காளியப்பனும் அவரது மகளுக்காக ரூ7 லட்சம் கொடுத்தது தெரியவந்தது. எங்களிடம் பணத்தை பெற்றுக்கொண்டு வேலை வாங்கி தருவதாக ஆசை வார்த்தை காண்பித்து ஏமாற்றியது தெரியவந்தது. இது சம்மந்தமாக காளியப்பன் போலீசில் புகார் கொடுத்தார். நாங்களும் கொடுத்தோம். எதிரி எழுதி கொடுத்த பணத்தை திருப்பி கொடுப்பதாகவும், டைப்செய்து எழுதி அதில் கையொப்பம் இட்ட அசல் என்னிடம் உள்ளது. மேலும் நிரப்பப்படாத காசோலை ஒன்றையும் அவர் கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார். அந்த அசலும் என்னிடம் உள்ளது. என்னிடம் போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d.K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 194/2020

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பழனிவேல் |
| Father's Name | : | முருகேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1972 of the day of 01.08.2022

முதல் விசாரணை

நான் கரூர் மாவட்டம் புகலூர் தாலுகா குப்பம் நடுப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா2 எனது அண்ணன் ஆவார். எனது அண்ணி பெயர் சாமியாத்தாள். .ஏ,பிஎட் படித்துள்ளார்.அவர் ஆசிரியர் வேலைக்கு முயற்சி செய்துகொண்டிருந்தார். எதிரி பாலமுரளி சுபம் டிராவல்ஸ் ல் டிரைவராக வேலை செய்து

S/d.K.Ambiga

அசா 3 பழனிவேல் — நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கொண்டிருந்தார். அதனால் அவர் என் அண்ணனுக்கு பழக்கம்.அவர் என் அண்ணிக்கு அரசு வேலை வாங்கி தருவதாக சொல்லி அதற்கு 3 லட்சம் செலவாகும் என்று என் அண்ணனிடம் சொன்னார். மேலும், 1 மாதத்திற்குள் ரெடி பண்ணி கொடுக்க சொன்னார். அதன் பேரில் 10.01.2018 ம் தேதி கரூர் ஈஸ்வரன் கோவில்வடபுறம் கஸ்தூரிபாய் மருத்துவமனை முன்பு 3 லட்சத்தை என் அண்ணன் ரொக்கமாக கொடுத்தார். அப்போது நான் உடன் இருந்தார். 8 மாதத்தில் வேலை வாங்கி தரவில்லை பணத்தை திருப்பி கொடுப்பதாகவும், டைப்செய்து எழுதி அதில் கையொப்பம் இட்டு சாட்சியாக நான் கையொப்பம் செய்து எதிரி கொடுத்துள்ளார். பிறகு 1 வருடம் ஆகியும் எங்களுக்குவேலை வாங்கி கொடுக்கவில்லை என் அண்ணன் கொடுத்த பணத்தையும் கொடுக்கவில்லை. விசாரித்தபோது செல்வவிநாயகா டிராவல்ஸ் நடத்தியவரும் காளியப்பனும் அவரது மகளுக்காக ரூ7 லட்சம் கொடுத்தது தெரியவந்தது. என் அண்ணனிடம் பணத்தை பெற்றுக்கொண்டு வேலை வாங்கி தருவதாக ஆசை வார்த்தை காண்பித்து ஏமாற்றியது தெரியவந்தது. இது சம்மந்தமாக என்னிடம் போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d.K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.